விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 28 ஜூல்கஸ் 4 இதழ் 151

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-7-1986

# "இந்திய மீனவர் பாதுகாப்பை இந்திய கடற்படை கண்காணித்துக்கொள்ளும்"

சென்னை, ஜூலை 11

"இந்திய கடல் பகுதியில் மீனவர்களுக்கு பாதுகாப்பளித்து எவ்வித தொல்லையும் ஏற்படாதவாறு இந்திய கடல்படை கண்காணித்துக் கொள்ளும் என்று இந்திய கடல்படை அதிகாரி அட்மிரல் மார்ஷல்ஏ.ஸி. கோப்ரா தெரிவித்துள்ளார்.

சென்னை துறைமுகம் வந்துள்ள ஐ. என். எஸ். விமாவம் தாங்கி கப்பலில் வைத்து பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய மீனவர்களைப்பாதுகாப்பதற்காகவே கடல்படையும் கடலோர காவல்படையும் இராமேஸ்வரம் பகுதியில் நிலைகொண்டுள்ளது, என்று தெரிவித்துள்ள அவர் இந்தவிடயத்தில்அரச கொள்கைகளுக்கு ஏற்பஇந்திய கடல் படையினர் இலங்கை இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள் என்றார்.

இந்திய கப்பல் படையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அவர் தெரிவிக்கையில், மேலும் ஒரு விமானம் தாங்கிக் கப்பல் கட்டும் யோசனை உள்ளதாகவும் அத்துடன் இந்திய கடல்படை நீர்மூழ்கி கப்பல்களை எதிர்த்து தாக்கக் கூடிய இரு நவீன நீர்மூழ்கி கப்பல்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து வாங்கியிருப்பதாகவும் திரு. கோப்ரா மேலும் தெரிவித்தார். (பி)

## ● வவனியா புலவனூரில்

# துப்பாக்கிசூட்டுக்காயத்துடன் 4 சடலங்கள் மீட்கப்பட்டன

## 'ஹெலி' தாக்குதலில் மாணவன் பலி

(வவனியாவிலிருந்து நமது நிருபர்)

வவனியா புலவனூரில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் நான்கு சடலங்கள் நேற்றுமீட்கப்பட்டன .இச்சடலங்களில் ஒன்று அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டது.

இதே சமயம் பெரியதம்பனை பகுதியில் இடம்பெற்ற 'ஹெலிகொப்டர்' தாக்குதலின்போது பாடசாலை மாணவன் ஒருவர் பலியானர்.

நேற்று முன்தினம் பூவரசங்குளததில தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடடுக்குப் பலியான விவசாயிகளின் சடலங்களுள் இந்த நான்கு சடலங்களும் அடங்குமெனத் தெரியவந்துள்ளது.

நேற்று நண்பகல் பெரியதம்பனைப் பகுதியில் ஹெலிகொப்டர் தாளப்பறந்து

(5ம் பக்கம் பார்க்க)

## ● மாகாணசபையைஎதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

### நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

அரசியல் கடசிகளின் மகாநாட்டையும் மாகாணசபைத் திர்வையும் எதிர்த்து நாளை காலை யாழ். குடாநாட்டில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை பொதுமக்கள் நடாத்தவுள்ளனர்

நாளை காலை 9 மணிக்கு மருதனமடம் சந்தியில் ஊர்வலம் ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதிவழியாக நாச்சிமார் கோவிலடியை அடைந்து பின்னர் யாழ். பல்கலைக்கழக மைதானத்தை அடையும்.

இங்கு பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமாக பொதுமக்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழ் பேசும் மக்களே! எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க அரசாங்கம் கங்கணம் கட்டி வருகிறது. எமது மக்களைக் கொன்றொழிக்க சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் உதவியைப் பெற்றுவருகிறது. இவ்வாறு தன்னைப் பலப்படுத்துவதற்கான கால அவ

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று கொழும்பு வரும் கூட்டணி குழுவினருக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

இனப்பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நேரடியாகப் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், மற்றும் திரு. இரா. சம்பந்தன், திரு. யோகேஸ்வரன், திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் இன்று (சனி) சென்னையிலிலிருந்து கொழும்பு வந்து சேர்வார்கள்.

எதிர்வரும் திங்களன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுச்கள் நடத்துவார்கள்.

கூட்டணியினர் தங்குவதற்கான ஹோட்டல் வசதிகளையும் மற்றும் பாதுகாப்பு வசதிகளையும் அரசு மேற்கொண்டுள்ளதுடன், கூட்டணிக் குழுவினர் பாதுகாப்பாக கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து ஹோட்டல் சென்றடையும் வரை விஷேசப் பொலிஸ் பிரிவினரின் பாதுகாப்பும், அளிக்கப்படவுள்ளது. (ய - பி)

## யாழ். வாசிக்கு 10 லட்சம் அதிஷ்டம்

யாழ்ப்பாணம், சனி.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு எ. ஆறுமுகம் என்பவருக்கு செவன ஜாதிக அதிஷ்டலாபச் சீட்டில் முதல் பரிசாக ரூபா பத்து லட்சம் கிடைத்துள்ளது

உகண்டாவிற்கு வேலை தேடிச் செல்விருந்த இவர் செல்வதற்கு சற்றுமுன் வாங்கிய சீட்டிற்கே இத்தொகை

(5ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கைதான 50 இளைஞர்கள் குறித்து எவ்வித தகவலும் இல்லை

(அலுவலக நிருபர்)

திருமலை நகரில் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 50 இளைஞர்கள் நிலைமை பற்றி எதுவித தகவலும் இறுவரை பெறமுடியவில்லை என்று அவர்களின் பெற்றோர் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த 9 ம் திகதி காலை திருமலை நகரை முற்றுகையிட்ட ஆயுதப்படையினர் 50 இளைஞர்களைக் கைதுசெய்தது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க திருமலை மாவட்டத்தில் நேற்று மாலை 6 மணி தொடக்கம் இன்றுகாலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுடந்த புதன்கிழமை இரவு ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு திருமலை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கும் 11 பேரின் சடலங்களையு பொறுப்பேற்பதற்கு உறவினா எவரும் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம் காணமல்போன 3 பேரின் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையாம்.

கடந்த புதன்கிழமை ஊர்காவல்படையினரால் படு

(5ம் பக்கம் பார்க்க)

## தடைப்பட்ட மருந்துகள் இன்றுவந்துசேரும்

யாழ்ப்பாணம், சனி.

ஆனையிறவு தடைமுகாமில் கடந்த மூன்று தினங்களுக்கு முன் திருப்பி அனுப்பப்பட்ட யாழ்ப்பாண ஆஸ்பத்திரிகளுக்கான மருந்து வகைகளை உடன் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், நேற்று மேலிடத்துடன் தொடர்பு கொண்டு இம்

(5ம் பக்கம் பார்க்க)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க் ★ சவூதி அரேபியா

கனடா டென்மார்க் ஆகிய இரு நாடுகளுக்கு எமது முகவர் உங்களை பிரச்சனைகளற்ற முறையில் உடன் நேரடியாக அழைத்துச் செல்வார். அத்துடன் சவுதிக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படுவர்.

20-ம் திகதிக்கு முன்தொடர்பு கொள்ளவும்.

N. பாலா,
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

(பஸ் வழி இல. 764, பலாலிவீதி.)

(C3439)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள [England make Incubator] 100 முட்டை அடைவைக்கக் கூடிய குறைந்த மண்ணெண்ணெயில் இயங்கும் குஞ்சு பொரிக்கும் மெசின் விற்பனைவுக்குண்டு. சிக் அன் கைன், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C-3421]

தமிழ் தட்டச்சு இயந்திரம் [Standard Typewriter] உடன் விற்பனைக்கு உண்டு Shanmuganathan, 43/3, 2ம்ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (உதயன் Press அருகாமையில்). (C-3425

சிங்கர் தையல் மெஷின், Formica Dinning Table, தேக் அலுமாரிகள், Celing Fan, கசட் றேடியோக்கள் 20'' கலர் T.V., Gas and Electric Cooker, Kenwood Chef Iron safe, மணிக்கூடுகள், Room. partition, Bath Tub, Three in one Projector உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S. பத்மநாதன் ஆடியபாதம் றோட், திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்கும்இடையில்) [C-3428]

பெரிய Singer Fridge (Kerosine) அழகானதும், சிறிது பழுதடைந்த நிலையில் மின் சக்திமூலம் பாவிக்க மாற்றியமைக்கலாம், (Villiers) நீர் இறைக்கும் இயந்திரம் [Mark - 12], Cassette Radio (J. V. C) Guitar மோட்டர் சைக்கிள், Pannier Bags ஒருசோடிப்பக்கப் பெட்டிகள், பால் (Can) 5 கலன், Petromax மரம் அரியும் கைவாள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 62/1, கச்சேரி நல்லூர்றோட், யாழ்ப்பாணம். [C 3417]

வீட்டுத்தளபாடங்கள் Show Case, கட்டில், அல்மாரி, கண்ணாடிமேசை Dressing Table தையல்மெஷின், Kenwood Chef, எவர்சில்வர், Pyrex ரீசெற், Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Sanyo Oven, Baby Cot, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, Main Street, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி.) C 3414]

## சேவை

றேடியோ, தட்டெழுத்து, அச்சு வேலைகளும் மிகவும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள் தயா அச்சகம், 138, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [C 3434]

நவீன யந்திரமூலம் அனுபவமிக்க தொழிலாளர்களினுல் கச்சான் முழுப்பருப்பாக மொத்தமாகவும், சில்லறையாகவும் உடைத்துக்கொடுககப்படும். விபரங்களுக்கு:- M G M. 777, K K S. Rd, Jaffna. T. P:- 22611. [A-926]

## வாடகைக்கு

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் வீடுவாடகைக்கு உடனடியாக விடப்படும். விபரங்கட்கு நேரில் வரவம். தமயந்தி அச்சகம், மானிப்பாய். [C-3405]

## தேவை

தெல்லிப்பளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள ஒரு லேத்மன் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், தெல்லிப்பளையிலிருந்து 3 மைல் சுற்றுடலில் வசிப்பவரும் விரும்பத்தக்கது. 18-7-86 க்குமுன் விண்ணப்பிக்கவும் டயானி எலெற்றிக்கல்ஸ், 222, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C 3433]

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள் தேவை. சம்பளம் 25/- - 30/- வரை தகைமைக்கேற்றவாறு கொடுக்கப்படும். ஆண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும. 18, கொண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம். [C 3356]

நூடில்ஸ் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. அதற்குரிய உபகரணங்களும் இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளவும். 132, ஆடியபாத வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில். [3357]

எவ்வகை இனமாயினும் இறைச்சிக்கு கோழி தேவை. உயர்ந்தபட்ச விலையுடன் நேரில் வந்தும் பெற்றுக்கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T P. 23131. [C 3418]

தெல்லிப்பழையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு இரவு நேரக் காவலாளி ஒருவர் தேவை. தெல்லிப்பழையிலிருந்து 3 மைல் சுற்றளவுக்குள் வசிப்பவராகவும், 45 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. 15-7-86க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும் டயானி எலெக்றிக்கல்ஸ். 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C 3398]

நன்கு அனுபவமுள்ள சமையல் வேலை தெரிந்தவர்களும், வெயிற்றர் வேலை செய்யக் கூடியவர்களும் உடன் தேவை. நேரில்வரவும். றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ். 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 3406]

## வகுப்புகள்

Electronic Engineering English Medium - B Sc. 1st year Level வயறிங், ரேடியோ, ரீ வி (Antenna and Deck), வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், English Typing, புதிய வகுப்புக்கள் செய்முறைப் பயிற்சிகளுடன் 12-07-86 இல் ஆரம்பமகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, (ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3359)

ஆரம்பம் - City and Guilds London - Part I And II, Electrical Engineering (Power) 1½ மாத கால வயறிங் பயிற்சி, 6 மாத கால மோட்டார் றீவயிண்டிங் பயிற்சி. முன்கூட்டியே உங்களைப் பதிவு செய்யுங்கள். ஓமேகா, மானிப்பாய், வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்.] (C 3389)

## மணப்பந்தல்

டாக்டர், எஞ்சினியர், எக்கவுன்டன்ற், வங்கியாளர், ஆசிரியர் முதலானோர் எல்லா இன மதத்திலும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் வரவும். வெளிநாட்டில் வேலை செய்யும் மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C-3412]

இருபாலாருக்மான டாக்டர், எஞ்சினியர், வங்கி ஊழியர், ஆசிரியர், தனியார் நிறுவன ஊழியர், மற்றும் பல தொழிலாளர்களின் ஜாதகக் குறிப்புகளும் எம்மிடம் உண்டு. தொடர்பு: திருமதி சரோஜினி யோகநாதன், பிறிமல்றி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. [C 3429]

பொ. காங்கேசன்
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு றெம்பிள் றோட்டைச் சேர்ந்த நாகமுத்து சிவசுப்பிரமணியத்தின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— காலம்சென்றவர்

நாகமுத்து சிவசுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியம் ''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு, றெம்பிள் றோட்.

— மனுதார்.

வழ. இல: தத்துவம்/3981

எதிராக

1. சிவசுப்பிரமணியம் பாஸ்கரன்
2. சிவசுப்பிரமணியம் சுதாகரன்
3. இரத்தினகோபால் சிவகோபால்
4. பெண் கௌரி
5. நாகமுத்து சிவசுப்பிரமணியம் மகள் மைதிலி [பராயமற்றவர்- எல்லோரும் ''கௌரி பவனம்'' கொக்குவில் கிழக்கு, றெம்பிள் றோட்.
6. சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் [இவர் 5-ம் எதிர் மனுதாரின பாதுகாவலராக நியமிக்கப்பட்டவர்] றெம்பிள் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

— எதிர்மனுதார்கள்

மேலே குறிப்பிடபபட்டிருக்கும் இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப் பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினுல் இந்நீதிமன்றம் அவர் கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்துக்குக் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றார்.

இந்த 1986 ம் ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி என்னுல் வரையப்பட்டது.

பொ. காங்கேயன்,
மனுதாரின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்,
கு. குலசிங்கம்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

(C-3430)

## தவறிவிட்டது

H. T. தர்மநேசன் என்பவருடைய 643110989V அடையாள அட்டையும், மண்ணிற பர்ஸும் கைதடிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 29-6-86 அன்று தவறிவிட்டது கண்டெடுந்தவர்கள் தயவு செய்து Y. M. C. A. கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். [C-3423]

சந்தணம் தேவசகாயம் 162, ஹவலக் றோட், கொழும்பு 5 என்பவருடைய அடையாள அட்டையும், டிறைவிங் லைசென்ஸ் (இல. 347203) புத்தகமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வி. எம் சண்முகம், 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C-3422]

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி ஆலய வீதியைச் சேர்ந்த அபி. ஞானம்மா அல்லது ஞானதீபம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தமாகச்செய்யப்படும் விண்ணப்பம்:

மரணமெய்தியவர்.

ஜேம்ஸ் பாட்டன் கன்ற், ஆலயவீதி, சாவகச்சேரி.

மனுதார்.

வழக்கிலக்கம்:
மரணசாதன
நியாயாதிக்கம்:-222

எதிராக

1. கறோலின், கல்டா கன்றும்,
2. தோமஸ் போயேச் கன்றும் இருவரும் ஆலயவீதி, சாவகச்சேரி.

எதிர்வாதிகள்.

மேலே இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் உள்ள மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்வருமாறு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1986ம் ஆண்டு ஆனிமாதம் 24ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிட்ட எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள வேறெவரேனும் போதிய எதிர்காரணங்கள் காட்டினுலன்றி 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 6ந் திகதி பிரசித்த நொந்தாரிஸ் எஸ். கே. திரவியநாயகம் முன்பாக 2015ம் இலக்கத்தில் முடிந்ததும் இந்நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதுமான மேற்சொல்லிய மரணமெய்தியவரால் நிறைவேற்றப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும் அம்மரண சாதனத்தின் நிறைவேற்றுனர் மேற்சொல்லப்பட்ட மனுதாரென்றும் அவ்வாறுன நிறைவேற்றுனர் என்றவகையல் குறித்த மரணசாதனத்தின் மீதான நிர்வாகத் தத்துவப் பத்திரங்கள் மனுதாருக்கு வழங்கப்படவேண்டுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகிறது

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 27ந் திகதி, 29-7-86க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

வரைதல்:
எஸ். கே. திரவியநாகம்,
மனுதாரின்
சட்டத்தரணி. (C 3374)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலைப் பீடத்திற்கும், நூலகத்திற்கும் உருக்கிலுலானதும் மரத்திலுலானதுமான தளபாடங்கள் வழங்கல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கும், நூலகத்திற்கும் உருக்கினுலானதும், மரத்தினுலானதுமான தளபாடங்கள் வழங்குவதற்கு பொறியிடப்பட்டகேள்விகள் கோரப்படுகின்றன.

அளவுகள், மாதிரிப்படங்கள் அடங்கிய வரைபடங்கள் போன்ற விபரங்களை பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 18-07-1986 ம் திகதிவரை பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 100/- க்கான காசுக் கட்டளை/ தபாற்கட்டளை அனுப்பப்படவேண்டும். கேள்விகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுதிகதி: 25-7-86 மு ப. 10-00 மணியாகும். விண்ணப்பக் கடிதஉறையின் இடதுபுற மேல்மூலையில் பர/F/Sk/10/25/07/86 என்ற இலக்கம் குறிப்பிடப்படவேண்டும்.

பதிவாளர்.
[A-927]

### முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வன் லவகீசன்**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் வசிக்கும் மகேந்திரன் - கலைவாணி தம்பதியரின் செல்வப் புதல்வன் லவகீசன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 12 07-86 தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை வாழ்த்துவோர்: அப்பா, அம்மா. அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, ஜேர்மன் பெரிய மாமா, அத்தை, மச்சாள்மார், யாழ்ப்பாணம் ஆசைஅத்தை, ஜேர்மன் சின்ன மாமா, யாழ். அத்தை, ஜேர்மன்பெரிய மாமா, ஆசை மாமா, சின்னமாமா, யாழ். பவானி அன்ரி, குட்டி மாமா, ஜேர்மன் தயா சித்தப்பா, பிறின்ஸ் சித்தப்பா, யாழ். டொலி சித்தப்பா, கரன் சித்தப்பா, அத்தைமார், மற்றும் இனம் சுற்றத்தவர்கள் இவரை பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் 'வாழ்க'வென வாழ்த்துகின்றனர். (C 3393)

# பாலஸ்தீன அகதி முகாம் மீது இஸ்ரேலிய விமானம் தாக்குதல்!

## பத்துப்பேர்பலி; பலர் காயம்!

உலகச் செய்திகள்

பெய்ரூட், ஜுலை-11

**லெபனுன் துறைமுகம் சைதானுக்கு அருகே அமைந்துள்ள பிரதான பாலஸ்தீனிய அகதி முகாமொன்றினைச் சுற்றிய இலக்குகளின் மீது இஸ்ரேல் விமானங்கள் பயங்கரத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.**

கடல் வழியே இஸ்ரேலுக்குள் ஊடுருவல் செய்வதற்குப் பாலஸ்தீனியர் சிலர் எடுத்த முயற்சிக்கு ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இத்தாக்குதலின்போது பத்து பேர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸபா என்னும் பாலஸ்தீனிய குழுக்களின் மத்திய மையங்களின்மீது தங்களுடைய விமானங்கள் பெரும் தாக்குதல்களை மேற்கொண்டதாக இஸ்ரேலியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹெலிகொப்டர்கள். ரொக்கெட்டுகளால் தாக்கியும், குண்டுகளை வீசியும் நடத்திய தாக்குதலால் பெரும்பாலான கட்டிடங்கள் பெருஞ்சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை இறப்பர் படகு ஒன்றில் ஏறியவண்ணம் வடக்கு இஸ்ரேலியக் கரையோரப் பகுதியில் இறங்குவதற்கு முயற்சிசெய்த பாலஸ்தீனியக் குழுவொன்றை இஸ்ரேலியர்கள் ஏற்கனவே இடைமறித்துத் தடுத்துவிட்டனர்.

இஸ்ரேலிய வடஎல்லைக்குக் கரை சேருமாறு பாலஸ்தீனியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இச்சம்பவத்தில் இடம்பெற்ற இருதரப்பினருக்குமிடையிலான மோதலில் இரண்டு இஸ்ரேலிய சிப்பாய்கள் இறந்துவிட்டதாகவும், பாலஸ்தீனியர் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [து]

## ஏ. எஸ் பி. ஊழியர்கள் வேலைநிறுத்தம்

பாரிஸ், ஜுலை-11

ஏ.எஸ் பி. என்ற பிரெஞ்சு செய்தி ஸ்தாபனத்தின் ஊழியர்கள் தங்கள் நிறுவனம் 1988ம் ஆண்டில் 300 ஊழியர்களை வேலைநீக்கம் செய்யவிருப்பதைக் கண்டிக்கும் முகமாக நேற்று 24 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். [து]

## இந்திய அரசு ஆழ்ந்த கவலை

புதுடில்லி, ஜுலை-11

ஜுலை மாதம் முதல் திகதியிலிருந்து இலங்கை இராணுவத்தால் தமிழர்கள் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து இந்திய அரசு இலங்கைஅரசிடம் தனது ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளது. [து]

## சிலை பிரதிஷ்டை

ஹற்றன் புதன்

ஹற்றன் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவிலில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆனிஉத்தரத்தன்று முத்துமாரியம்மன் திருவுருவச்சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. [மா]

## இந்திய மீனவருக்கு எச்சரிக்கை

புதுடில்லி, ஜுலை-11

இலங்கைக் கடலாதிக்கப் பகுதிக்குள் எக்காரணத்தைக் கொண்டும் செல்லவேண்டாம் என்று இந்திய மீன்வளத்துறை இயக்குநர் திரு எஸ் கே. திருபாதி ராமேஸ்வரம் மீனவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக் கடலாதிக்க எல்லைக்குள் இந்திய மீனவர்கள் பிரவேசிப்பதால் நிலைமை மோசமடைந்து உயிர்ச் சேதங்கள் ஏற்படலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'தென்னுபிரிக்காமீது ஈ.ஈ.ஸி.நாடுகள்பொருளாதார தடை விதிக்க வேண்டும்!"

### ஐரோப்பிய பாராளுமன்றம் கோரிக்கை

பொன், ஜுலை-11

தென்னுபிரிக்கா தனது இன ஒதுக்கற்கொள்கையைக் கைவிடச்செய்வதற்காக அதன் மீது பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்தின் (ஈ. ஈ. ஸி.) பன்னிரண்டு உறுப்பு நாடுகளும் விதிக்கவேண்டுமென ஐரோப்பியப் பாராளுமன்றம் கோரியுள்ளது.

தென்னுபிரிக்காவில் புதிதாக முதலீடுகள் செய்வதற்கு உடனடியாகத் தடைகளை விதிக்குமாறும் இப்பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.

தென்னுபிரிக்காவிலிருந்து நிலக்கரி, மற்றும் இரும்பு, தங்க இறக்குமதிகளையும் தடை செய்யவேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

தென்னுபிரிக்காவில் ஒரு மாதத்திற்கு முன்னர் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து நாளைமறுதினம் தேசிய செயற்தினம் அனுசரிப்பதெனத் தென்னுபிரிக்காவின் மிகப் பெரிய வெள்ளையரல்லாத தொழிலாளர் சம்மேளனம் அறிவித்துள்ளது. [து]

## அகதிகளுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

சாவகச்சேரி வெள்ளி

கைதடி வெளிக்கள நிலையத்தில்இருக்கும் 30 கிளிநொச்சி அகதிகள் குடும்பங்களுக்கும் சாவகச்சேரி நகரப் பிரிவில் மிக விரைவில் தற்காலிக புனர்வாழ்வுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அறவழிப் போராட்டக் குழுவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## தேர்த்திருவிழா

இருபாலை, சனி

கோப்பாய்பழையவீதிஅருள்மிகு வீரபத்திரர் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இம்மாதம் 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த உற்சவம் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற்று நாளை தீர்த்தத்திருவிழாவுடன் நிறைவுறுகின்றது.

## போராளிகுழுக்கள் புதுடில்லி அழைப்பு

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐந்து தமிழ் ஈழப் போராளிகள் குழுக்களின் தலைவர்களையும் இன்று புதுடில்லிக்கு வருமாறு இந்திய அரசு அழைத்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ மக்கள் விடுதலைக் சழகம், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றின் தலைவர்கள் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வார்கள். [து]

இலங்கை வங்கி

## பாதுகாப்பு ஊழியருக்கு 50 ஆயிரம் நஷ்டஈடு!

யாழ்ப்பாணம் வெள்ளி

இலங்கை வங்கியில் கடமையின் போது விபத்துக்குள்ளாகும் ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுத்திட்டத்தின் கீழ், பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையின் பாதுகாப்பு ஊழியரான திரு. வேலும்மயிலும் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபா நேற்று வழங்கப்பட்டது.

இவர் 84 ம் ஆண்டு மேற்படிக் கிளையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தினுல் மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவராவார்.

நஷ்டஈடுவழங்கல் வைபவத்தில் உரையாற்றிய மாவட்ட முகாமையாளர் திரு ஸ்ரீ ரங்கநாதன் திரு வேலும் மயிலும் அவர்களின் கடமையுணர்ச்சியைப் பாராட்டியதுடன், இந் நஷ்டஈடுவழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்த வங்கி முகாமைத்துவத்துக்கும் நன்றி தெரிவித்தார். மற்றும் பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு விக்னராஜா, நெல்லியடிக்கிளை முகாமையாளர் திரு தில்லைநாதன், பாதுகாப்புப் பிவைச் சேர்ந்த திரு. யோசராஜா ஆகியோர் உரையாற்றினர்.

## "தமிழ்மாகாண சபைகளுக்கு சுதந்திர நீதிபரிபாலன அமைப்புத் தேவை"

### முன்னுள் இந்திய நீதியரசர்

சென்னை: ஜுலை. 11

உத்தேச மாகாணசபை அமைப்பின்கீழ் தமிழ்மாகாண சபைகளுக்கு சுதந்திரமான நீதிபரிபாலன அமைப்பு ஸ்தாபிக்கப்படவேண்டுமென ஓய்வு பெற்ற இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர் கிருஷ்ணஐயர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை- இந்திய நட்புறவுச் சங்கத்தினுல் நேற்றுமுன்தினம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக்கூறினுர்.

உயர்நீதிமன்றத்தில் தமிழர்கள் உரியவகையில் பிரதிநிதித்துவப்படுத்தப் படவேண்டும் எனக்கூறிய திரு. ஐயர் இவர்களை நியமிக்க சுதந்திர ஆணைக்குழுவொன்றும் நியமிக்கப்படவேண்டுமெனக் கோரினுர்,

திரு. ஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ்மக்கள் தனித்துவமான இனமாவர். அவர்களுக்கு பூரண அதிகாரமுள்ள சுயாட்சி வழங்கப்படவேண்டும். இலங்கை அரசு உண்மையிலேயே அதிகாரப் பரவலாக்கல் செய்ய விரும்பினுல் அது ஒரு மாகாண முதல்வரின் ஆலோசனையுடனேயே அம்மாகாணத்தில் ஆளுனரை நியமிக்க வேண்டுமெனவும் திரு ஐயர் கூறினுர்.

ஜெனிவாவில் அமைந்துள்ள 'சர்வதேச விவகாரங்களுக்கான தேவாலயங்களின் கவுன்ஸில்' அமைப்பின் இயக்குநர் திரு. நினன்கோஷி உரையாற்றுகையில், 'இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக இதில் சம்பந்தப்பட்ட சகலரும் உறுதியாக உழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது' என்றுர். [ய-செ]


பிரயாண ஒழுங்குகள்
டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜுலை 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 774)

### மணிவாக்கு

கற்றதைச் செயலில் பயன்படுத்தாதவன் நிலத்தை உழுதுவிட்டு, விதைக்காதவனைப் போலாவான்.

—இமாம் சா அதி

## நமது நோக்கு

# கதிரேசனின் கதை

சுற்றிச்சுற்றிச் சுப்பற்றை படலையில் நிற்கும் போக்கு நாட்டின் இந்த நெருக்கடியிலும் மாற்றம் காண்பதாக இல்லை.

தினசரி கொல்லப்படுவோர் எங்கோ இருக்கும், அப்பாவி மக்களே! ஆட்சித் தலைவர்கள் ராணுவஜெனரல்கள் போல் படுத்த படுக்கையிலிருந்து உயிர்நீக்கும் வாய்ப்புடையவர்கள்!

இந்த உண்மைக்கு உதாரணமாக இருப்பவர் திரு. அனில் முனசிங்கா. கடந்த சிறிலங்கா ஆட்சியின் பெரும் பிரமுகராக விளங்கியவர் சோஷலிசவாதி முனசிங்கா, அந்தக்கட்சிக்கு இக்கதி நேரிட்டதை இன்னும் புரியவில்லையென்பது அவருடைய பொறுப்பற்ற பேச்சில் தெளிவாகிறது. உலக்கை தேய்ந்து உழிப்பிடியானகதை கிளைவிட்டுக் கிளை பாயும் அணிலுக்கு அதிசயமல்ல.

''தமிழ்ப் போராளிகளை மண்கவ்வ வைத்தல் இலகுவானதல்ல; அதனை நிறைவேற்ற ராணுவம் பலப்படுத்தப்படவேண்டும் ஆயிரக்கணக்கில் ராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். போரில் நாம் அவர்களைத் தோற்கடிக்க முடியாவிட்டால் அரசியல் தீர்விலும் தோல்வியே காண்போம்'' என்கிறார் அனில். எந்த மருந்தைக் கொடுத்தும் இன்றைய ஆட்சியை முறியடிக்க முயல்வதே அனில் போன்ற சிறிலங்கா வீரர்களின் நோக்கம்

இதற்கு நேர்மாருக அரசாங்கத்தின் ஊதுகுழல்கள் தங்கள் பல்லாண்டு வாசித்து வந்த பல்லவியைச் சற்றிலும் மாற்றவில்லை. குறிப்பாக அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகள், ஜனதிபதியின் விண்ணளாவிய பெருமையையும், அவர் இன்று கண்டுபிடித்திருக்கும் மாகாணசபைத் திட்டமென்ற 'சர்வரோக நிவாரணி'யையும் ஆகாசப்புளுகின் பொருளாகக்கொண்டிருக்கின்றன.

கதிரேசன் என்ெருரு எலும்புத்துண்டைக் கண்டதும் நாட்டின்தீராத காணி வழக்குக்கு ஒரு இதிகாசம் இயற்றி தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

கதிரேசன், கார்த்திகேயன் குகநாதன் போன்ற பெயருடையோர் முருகனின் திருநாமங்களையுடையவராகையால் வடக்கிலோ, தெற்கிலோ எங்கும் பாதுகாப்பாக வாழும் முருகன் அருள் பெற்றவர்கள் நாட்டின் புராதன முருகவழிபாட்டின் நற்பயன் இது.

கதிர்காமக் கந்தன் குடியிருக்கும் தூரதெற்கில் தமிழர் நாம் குறிப்பிடும் கதிரேசனைப்போல சிங்கள மக்களுடன் அன்னியோன்யமாக வாழ்வது பத்திரிகை இதிகாசத்துக்குரிய கருப்பொருளா?

சிறிலங்கா ஆட்சியில் கதிர்காம அழகுராணிக்கும், ஐ. தே. ஆட்சியில் கதிர்காம யாத்திரைக்கும் வந்த தமிழ்நாட்டுப் பிரமுகர் ஒருவருக்கும் நேர்ந்த கதி இலங்கையில் வாழ்ந்து வரும் இருபெரும் சமூகங்களுக்கும் சிறப்பாகவும்ஏனைய சமூகத்தவர்களுக்குப்பொதுவாகவும் படியளக்கும் கதிர்காமக்கந்தனின் ஆணையை மீறிய புறநடைச் சம்பவங்கள்.

எந்த ஆட்சியிலும் — அந்நியர் ஆட்சிக் காலங்களில் கூட—வடக்கிலும் தெற்கிலும் மக்களைப் பாதுகாக்கும் தெய்வானுக்கிரகம் குண்டாலும், ஹெலியாலும் அறக்கெட்டுப் போகவில்லை.

இதனை உறுதியாகக் கொள்ளாத எந்த அரசியல் தீர்வும் இன்று நாம் தாகமுறும் அமைதித் தீர்வுக்கு உதவாது.

''போர் உக்கிரத்தின் மத்தியிலும் தென்னிலங்கையில் லுனுகம்வெஹரா (Lunugamvehera) என்ற குடியேற்றத் திட்டத்தில், 58 வயதுடைய எட்டுப் பிள்ளைகளின் தகப்பன் கதிரேசன் தனது விவசாய சாதனங்களுடன் குடியமர்ந்திருக்கிருன். சிங்கள மக்களுடன் அன்பாய் வாழும் திடமுடையான்'' என்ற பாராட்டுப் புராணம் பாடப்பட்டிருக்கிறது இத்திட்டத்தில் தமிழருக்குரித்தான 11 சதவீதம் 500 குடிகள் இடம்பெறுவர் என்ற காணித் 'தரப்படுத்தலின்' முடிவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அநீதி அச்சத்திலிருந்து உருவாகிறது அச்சம் பேராசையின் விளைவு. தமிழர்களுக்கென்ெருரு பரம்பரைப் பிரதேசம் இந்தநாட்டில் உண்டா? என்ற வினு இதற்கு உதாரணமாகின்றது. அச்சம் நீங்கி இவ்வித வினுக்களை நாம் பெருகவிடாமல் சமயோசித புத்தியுடனும், அதேசமயம் தீர்க்கதரிசனத்துடனும் அணுகவேண்டும்.

காணி வழக்கை இன்றைய அரசியல் சூழ்நிலையில் பேசி முடிவுகாணுதல் அரிது; தமிழ்ப் போராளிகள் அதற்கு முற்றுக் காண்பதில் போரைத் தீவிரப்படுத்த விரும்புவது இயல்பு வீரமரணமடைந்த தமிழ்ப் போராளிகளின் சோக ஊர்வலம் யாழ்ப்பாணத்தின் இன்றைய பொதுப் பொலிவு!

இதன் கருத்தை, இரத்தக் கண்ணீரின் வரலாற்று முக்கியத்துவத்தைப் புரியாதவர்கள் பேதைகளே! அவர்கள் யாராயிருந்தாலும் இந்த நாட்டில் மாணிக்கவாசக சுவாமிகள் அன்று சிதம்பரத்தில் நடத்தியதாகக் கூறப்படும் 'புத்தரை வாதில் வென்ற' சம்பவம் மீண்டும் நடைபெறுமென்று சொல்லத் துணியார்கள்.

அதிகாரம் பரவலாக்கப்படுவது, ஒற்றைஆட்சியிலாலும் இலங்கைவாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணயம் என்ற அடிப்படை உரிமையை நியாயமான அளவிற்கு அளிபபதாலும் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்த, வாழ்ந்துவரும் பிரதேசங்களை உள்ளடக்கிய பிராந்தியம் ஒன்று உதயமாகவேண்டும்.

வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென்ற பிடிவாதம் சமரசத்துக்குத் தடையாக இருக்கலாகாதென்ற கருத்தை நாம் வெளியிட்டது உண்மை. சமரசமென்ற பண்பு 'றெடிமேட்' ஆடையைப்போலப் பூரணப்பட்ட நிலையில் கிடைப்பதில்லை.

நிரந்தரமான சமாதானம், நியாயமான பாதுகாப்பு என்ற நோக்கங்கள் நிறைவேறுவதானுல் வடக்கையும் கிழக்கையும் பிரித்துவைப்பது நீண்டகால அமைதிக்கு ஒரு போதும் உதவாது. பீ எல். ஓ. போல் இங்கு வாழும்தமிழர்கள்ஒருரீ எல். ஓ. வில் தேசாந்திரிகளாகும் கதி எங்கள் வருங்கால வரலாற்றில் இடம்பெறுமோ?

● இன்று

# மயிலேறும் வேலனுக்கு மாவையில் கொடியேற்றம்

தமிழ் பேசும் சைவமக்கள் வாழும இடங்களிலெல்லாம் முருகக் கடவுளும் முருகக்கடவுளின் திருத்தலங்களும அருட்பொலிவுடனும் கலைப்பொலிவுடனும் வழிபாட்டுச் சிறப்புடனும விளங்குவது போலவே மாவைக்கந்தசுவாமி கோவில் 13ம் நூற்ருண்டு தொடங்கி யாழ். குடா நாடுமுழுவதும் எல்லச் சிறப்புக்களுடனும் விளங்கிக் கொண்டிருக்கின்றது



பெருமழை பொழிந்தவேளையிலும் கவிழ்க்கப்பட்டிருக்கும் பாத்திரம் நீரை ஏற்கமாட்டாதுஇருப்பது போலவஞ்சனை இரக்கமின்மை முதலிய தீக்குணங்கள் படைத்தவர்கள் புண்ணியவேளையில், இறைவன் தன் கருணைப்பொழிவைஉணர்த்தக் கொடிகட்டி விழா நிகழ்த்துவிக்கும் திருவிழாக் காலங்களில் தெய்வீகத்தை இறையருளை உணராது துன்புறுவர்-புறங் கூறுவர்.

இறைவனின் கருணை ஆலய விழாச்சந்தர்ப்பத்தில் வெளிப்படும்போது ஒவ்வொருவரும் இரக்கமின்மை வஞ்சனை போன்றவற்றை விலக்கி புனிதத்துடன் இருக்கவேண்மென்பதற்காக நம் சைவ சமூகத்தில் சில நியதிகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

கோயிலில் கொடியேறித்திருவிழா நடைபெறும் காலங்களில் திருவிழா நிகழ்ச்சிகளை அநுசரிக்கும் வகையில் குறிப்பிடட ஆலயம் உள்ள கிராமத்தில் வாழ்பவர்களும் அந்த ஆலயத்தைத்தமது விசேட வழிபாட்டிடமாகக் கொள்பவர்களும் புலால் உணவு, எண்ணெய் முழுக்கு திருமணம் முதலியவற்றை விலக்கி இயன்ற வரையில் விரதமிருத்தல், திருவிழா நேரத்தில் ஒரு முறையாவது ஆலய வழிபாடு செய்தல், இறை தியானம் தானம் முதலியன செய்தல் என்பன திருவிழாக் காலத்தின் மூலம் திருவருளைப்பெற நம்சைவ மக்கள் மேற்கொள் கொள்ளும் விசேஷ ஒழுக்கங்களாகும். இவ்வொழுக்கங்கள் எல்லாம் மாவைக்கந்தசாமி கோவில் திருவிழாக்காலங்களில் யாழ்ப்பாணத்தின் எல்லாப்பகுதிகளிலும் உள்ள சைவமக்கள் கடைப்பிடிப்பதிலிருந்தே மாவைக்கந்தனின் அருட்பெருமையையும் புகழையும் எளிதல் அறிநது கொள்ளலாம்.

மாவைக்கந்தன் ஆலயக் கோபுரச்சிறப்பு, மூன்று திருவீதிகள் பலவகை மண்டபங்களின் சிறப்பு என்பனவற்றுடன் திகழும். மாவைக்கந்தசுவாமி திருவிழாக்காலங்களில் தெய்வீகச் சிறப்புடன் நடைபெறும் கொடித்தம்ப பூசையும் அருட்கோலாகலத்துடன் சுவாமி உலாவருதலும் ராஜசபை போன்ற வசந்த மண்டபத்தில் திருவோலக்கக் காட்சி பொலிய நிகழும் விஸ்தாரமான பூசையழகும் இவற்றையெல்லாம் விரத நியமத்துடனும் சைவாசாரத்துடனும் வழிபடும் அன்பர்களின் தூய திருக்கூட்டமும் அன்பர் மனத்தால் மீட்டும் மீட்டும் நினைக்கத்தக்க புனிதமுடையனவாகும்.

மனிதமனம் வெகுநுட்பமானது, ஆச்சரியப்படத்தக்க பல சாதனைகளைப் பயிற்றப்பட்ட பண்பட்ட மனமே சாதிக்கும் மனித மனத்தை எளிதாகப் பண்படுத்துவதோடு அதன் மூலம் உயிரையும் புனிதப்படுத்தி ஆத்மீக பலத்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துவதில் சைவாலய வழிபாடுகள், திருவிழாக்கள் என்பன சிறப்பிடம் வகிக்கின்றன.

மாற்றம், எழுச்சி, கலகலப்பு என்பனவற்றுல் கவரப்பட்டு கவரும் விடயங்கள் மயமாவது மனிதமனத்தின் சாதாரண இயல்பாகும். இவ்வியல்புக்கு ஏற்ற முறையில் மனித மனத்தைப் புனிதப்படுத்தும் தப்பாத சாதனை மயமாக விளங்குவதே சைவாலயங்களில் நடைபெறும் வருட உற்சவங்களாகும் இப்படியான உற்சவங்களில் உலாவரும் சுவாமியின் திருவுருவத்தை அலங்கரித்தல் பல்வேறு அமைப்புக்களில் சித்திர நுட்பமும் ஒழுங்கும் மிக்க வாகனங்கள், சப்பரம், தேர் என்பவற்றில் சுவாமி உலாவருதல், நாதகீதமயமான வேத தேவார பாராயணங்கள் மட்டுமின்றி மேளம் நாகசின்னம் போன்ற வாத்தியங்களாலும் இசைபெருக்குதல் போன்ற செயல்களெல்லாம் ஒன்றைவிட்டொன்று பற்றி அலைக்கழியும் மனத்தைத் தெய்வீக விடயத்திலே நிலைக்கச் செய்வதற்கு நம் சைவசமயம் வழங்கியுள்ள உபகாரங்களாம். குடத்துள் எரியும் விளக்கு கோபுரத்தில் எரியும் போதுபலரதும் கண்களுக்குவிருந்தளிப்பது போன்று சாதாரண கிராம ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் அந்த அந்தக் கிராமமக்களுக்கு மட்டும் மனத்தூய்மையை வழங்க பெருமை வாய்ந்த புண்ணியச் சேத்திரங்களான மாவைக் கந்த சுவாமி கோவில் முதலிய தலங்களில் நடைபெறும் விழாக்கள் நாடு முழுவதும் தெய்வீகம் கொழிக்கும் பெருமையுடன்அமைகின்றன.

— அருளாளன்

## தீவுப்பகுதி நெருக்கடிகள்: இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

தீவுப்பகுதியின் இன்றைய நெருக்கடி நிலைபற்றிய கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை காலை யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில், தீவுப் பகுதிகளின் போக்குவரத்துச் சேவைக்கு உடனடித் தீர்வுகாணும் வழிவகைகள், உணவு விநியோகம், வைத்திய சேவை, தபால் தந்திச் சேவை போன்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகள்பற்றி ஆராயப்படும்.

இக்கருத்தரங்கில் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள் கருத்துரை வழங்குவார்கள்.

யாழ். கமநலச்சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. கே பரமலிங்கம், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கா. குகபாலன், புங்குடுதீவு வெகுஜன விழிப்பு ஒன்றியத் தலைவர் திரு. சு. விஸ்வரத்தினம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா. சிவசந்திரன் ஆகியோர் இக்கருத்தரங்கை ஒழுங்குசெய்துள்ளனர். (வா)

## இறந்த குருநகர் மீனவர்க்கு ரூ.15 ஆயிரம் நிவாரணஉதவி

### வர்த்தகர் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம் வெள்ளி

மண்டைதீவில் கருப்புச் சட்டைப் படையினரால் படுகொலைசெய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு யாழ். வர்த்தகசங்கம் 15 ரூபா நிவாரண உதவியாக வழங்க தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரண நிதி சேகரிப்பில் இதுவரை வர்த்தகர்களிடமிருந்து 8,000 ரூபாவுக்கு மேல் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் 15 ரூபா சேர்ந்ததும் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (மா)

### இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி தயாரித்தளிக்கும் ''வெறியாட்டு'' நாடகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மேடையேறுகிறது.

நாளை பிற்பகல் மயிலணி மகா வித்தியாலயத்தில் இந் நாடகம் மீண்டும் மேடையேற்றப்படும்.

கவிஞர் இ. முருகையன் எழுதிய நாடகத்தை திரு. வி. எம். குகராஜா நெறிப்படுத்தியிள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

### நேற்று வெளிநாட்டு காசோலை ஒன்று தொலைந்து விட்டது

1082002962308 இலக்கம் கொண்ட 500 யு. எஸ். டொலர் (U. S. Doilor Visa Travellers Cheque) காசோலை களவாடப்பட்டு விட்டது. தயவு செய்து இதனை யாரும் காசாக்க முயற்சிக்க வேண்டாம்.

இக் காசோலையின் உரிமையாளர் தயவு செய்து எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**ராஜுஸ்ரோர்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**
(C 3444)



## ஓராண்டு நினைவஞ்சலி



**க. க. செல்லத்தம்பி**

தோற்றம்: 09-05-1925
மறைவு: 23-06-1985

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அன்புடன் எம்மை ஆதரித்த எம் குலவிளக்கே எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள். நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு நீங்கவில்லை ஐயா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புதுரோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
C 3431



**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் சரிதா நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.
**VENOM**
Action - Thrill


## ஒரு வாரமாகியும் மீனவர்கள் திரும்பவில்லை!

வல்வெட்டித்துறை வெள்ளி

கடந்த ஒருவாரமாக இரு பிளாஸ்ரிக் படகில் சென்ற எட்டு மீனவர்கள் இன்றுவரை கரை திரும்பிவரவில்லை,

தொழிலுக்குச் சென்ற இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏதாவது நடந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது

இவர்களைத்தேடும் முயற்சி பலவழிகளாலும் நடைபெற்று வருகிறது.

## இன்று சிலுவைப்பேரணி

சுன்னாகம், வெள்ளி

தற்போது நிகழும் அநீதியையும் அநியாயங்களைக் கண்டித்தும் உலகறியச் செய்யவுமானமாபெரும்சிலுவைப் பேரணியின்று சுன்னாகம் பங்கு மக்களால் நடாத்தப்படவிருக்கின்றது.

இன்று பிற்பகல் மூன்றரை மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும். இச் சிலுவைப் பேரணி மாலை மல்லாகம் சதாசகாய அன்னை சந்நிதானத்தை வந்தடைந்து அங்கு அஞ்சலிக் கூட்டமும் வழிபாடும் நடைபெறும். [ஷ]

## இன்று

யாழ்ப்பாணம், சனி.

உதய சூரியன் சனசமூக நிலையத்தின் திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும் இன்று பிற்பகல் வடக்கு மானிப்பாய் ச. ச. நிலைய முன்றலில் நடைபெறவுள்ளன,

## வானத்தில் மிதந்துவந்த தீப்பிழம்புகள்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பகுதியில் வானத்தில் மிதந்து வந்த தீப்பிழம்புகள் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தின.

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கும் 9 மணிக்குமிடையில் காங்கேசன்துறைப் பகுதியில் உருண்டை வடிவமான தீப்பிழம்புகள் எரிந்தபடி வானத்தில் மிதந்து வந்தன.

காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கு சமீபத்திலும், வீமன்காமத்திலும் இப்படியான தீப்பிழம்புகள் வீழ்ந்தபோது அவை சிறிய சத்தத்துடன் வெடித்ததாகவும், ஆனால் அவை சேதத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.

## 50 இளைஞர்..,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்ட ஓய்வு பெற்ற பொறியியலாளர் தம்பியப்பா குடும்பத்தினரின் 5 சடலங்களையும் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை பொறுப்பேற்று அடக்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நேற்றும் திருமலையில் பதற்ற நிலைகாணப்பட்டதாகத் தெழுவிக்கப்படுகிறது. (மா)


உ

விராட் விஸ்வப் பிரமநேநம

## புதுமனை புகுவிழா

★ ★ ★ ★ ★ ★ ★

நிகழும் அட்சய வருடம் ஆனி மாதம் 29 ஞாயிற்றுக்கிழமை [13-7-1986] பகல் 10.48 — 1.12 வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**"இலட்சுமி வாசம்"**

என்னும் புதுமனையில் குடிபுக இறையருள் கூடியிருப்பதால் தாங்களும்தங்கள் சுற்றமித்திரரும் வருகை தந்து புதுமனையை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் வரவை நாடும்
திரு. திருமதி நந்தகோபால்,
1010/6, K.K.S. வீதி, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ரூபி ஜுவலறி, 111/1, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம். [C3441]



## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் அஷய வருடம் ஆனிமாதம் 29-ம் நாள் (13 - 7 - 86) ஞாயிறுக்கிழமை காலை 8 மணி 30 நிமிடம் தொடக்கம் 10 மணி 15 நிமிடம் வரையுள்ள சிங்கலக்கின சுபமூர்த்தத்தில்.

| | |
|---|---|
| ஆர். ஜெரிமயியா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் | எஸ். எஸ். சபாநாயகம் தம்பதிகளின் ஏக புத்திரி |
| **ராஜமனோகரன்** | **கலைவாணி** |
| (கணக்காளர் ஜனோ இன்டஸ்ரீஸ் கனடா) | அவர்களுக்கும் |

மருதானை, ஸ்ரீ பாலசெல்வவிநாயகமூர்த்தி ஆலயத்தில் (Captain garden Temple) திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சமேதரராய் சமூகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்,

| | |
|---|---|
| ஆர். ஜெரிமயியாவும், பாரியாரும | எஸ். எஸ். சபாநாயகமும் பாரியாரும் |
| 100, வாட்பிளேஸ், கொழும்பு - 7. | E. 1/3, மாளிகாவத்தை பிளாட்ஸ், கொழும்பு - 10. |

(C-3443)


# யாழ். நோக்கிவந்த லொறியில் பணம், பொருள் கொள்ளை

யாழ்ப்பாணம், சனி

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்கள் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிவந்த வர்த்தகர் ஒருவரின் லொறியின் சாரதி தாக்கப்பட்டதுடன் 18 மூடை மல்லியும், 12 ஆயிரம் ரூபாவும் ஆயுதம் தாங்கிய காடையர் கோஷ்டியினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்துக்கும் நொச்சியாகமவுச்குமிடையில் இந்த வழிப்பறிக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

காடையரின் தாக்குதலுக்குள்ளான லொறி, யாழ் வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ். வி. முருகேசுவுக்குச் சொந்தமனது.

வானில் வந்த ஆயுதம்தாங்கிய காடையர் கோஷ்டி, லொறியை மறித்து சாரதியை சிங்களத்தில் 'எங்கே செல்கிறது' என்று வினவினார்களாம். சாரதி சிங்களத்தில் யாழ்ப்பாணம் என்றதும் சாரதியைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த 12 ஆயிரம் ரூபாவையும் லொறியிலிருந்த 18 மூடை மல்லியையும் கொள்ளை அடித்துவிட்டுத் தலைமறைவாகி விட்டனராம் (மா)

## ஆயுதப்படையினரால் கைதாகும் இளைஞர்களுக்கு கடுமையான வேலைகள்

மட்டக்களப்பு, வெள்ளி

அம்பாறை மாட்டத்தில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டுசெல்லப்படும் இளைஞர்கள், கடுமையான வேலைகளுக்குட்படுத்தப்படுவதாக அவர்களின் பெற்றோர் மட்டக்களப்பு பிரஜைகள் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில், அக்கரைப்பற்று, கோமாரி ஆகிய பகுதிகளில் ஆயுதப்படையினர் திடீர் திடீர் என தினசரி தேடுதல் வேட்டை நடத்துகிறார்கள்.

இப்பகுதிகளில் வயது குறைந்த இளைஞர்களே கைதுசெய்யப்படுவதாகவும், அவர்களைக் கொண்டு விறகுவெட்டுதல், பாரியபாதுகாப்புக் குழிகள் தோண்டுதல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் புகாரில் தெரிவிக்கப்படுகின்றது. (மா)

## திருக்கேதீச்சர பாதயாத்திரை

யாழ்ப்பாணம் வெள்ளி

கதிர்காமத் தீர்த்த தினத்திற்குத் திருகேதீச்சரத்திற்குபாதயாத்திரையாகச் செல்பவர் இம்மாதம் 20 திகதி மாந்தை கட்டாடிவயல் முருகன் கோவிலிலிருந்து பாதயாத்திரையாகச் செல்லவுள்ளனர்.

### தடைப்பட்ட...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மருந்துகளை பெறுவதற்கான முயற்சிகளை எடுத்துள்ளார்.

இம் மருந்துகள் இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

### யாழ்.வாசி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பரிசாகக் கிடைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் தனது உகண்டாவுக்கான பயணத்தை ஒத்திவைத்துள்ளார். [சிவ]

### துப்பாககி சூடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது

இச்சம்பவத்தில் 9வயது மாணவன் பலியானார்; பலர் படுகாயமுற்றனர்.

வவனியா மாவட்டத்தில் ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கி பிரயோகம் செய்ததில் பலியான காயமடைந்த சம்பவம் நேற்று முதற் தடவையாக இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. [மா]

### மாகாணசபை ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காசத்திற்காகவே பேச்சுவார்த்தைகளையும் மகாநாடுகளையும் நடாத்தி வருகிறது.

"இச் சதிவேலைக்கு தமிழ் மக்களின் மத்தியிள்ள சில துரோசக் கும்பல்களும் துணை போகின்றன.

'இத்துரோகத் தனத்தை அம்பலப்படுத்தவும் எமது விடுதலைப் போராட்டத்தில் எமது மக்களின் உறுதிப்பாட்டைத் தெரியப்படுத்தவும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டிற்கும், மாகாணசபைத் தீர்விற்கும் எதிர்ப்புத் தெரிவிக்க மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து தமிழ்பேசும் மக்களையும் வேண்டிக் கொள்கிறோம். (மா)


## நியு விக்ரேஸ்

புதிய வீடியோ படவெளியீடுகள்

**1. கடலோரக் கவிதைகள்**
(தரமான பிரதி)
சத்தியராஜ்- ரஞ்சனி- ரேகா (அறிமுகம்)

**2. தர்மம்**
(தரமான பிரதி)
ஜெய்சங்கர்- சத்தியராஜ்- கே.ஆர்.விஜயா- சரிதா

**3. காட்டுக்குள்ளே திருவிழா**
(கமரா)

[A794]

## வீடியோ படத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகைகள் உடனடியாகத் தேவை

விரைவில் தயாரிக்க இருக்கும் வீடியோ படத்தில் நடிப்பதற்கு ஆற்றல்மிக்க நடிக, நடிகைகள் உடன் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

நேரம் 9-30 முதல் 12-00 மணிவரை

**மேஹர்ஷண்**
**மணிக்குரல் விளம்பர சேவை**
**பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.**

(A-781)



# வெளிநாடு பிரயாணம்

எனது குரூப் ஒரு கஷ்டமுமின்றி சென்ற வாரம் சென்றடைந்தது. அடுத்த குரூப் எதிர்வரும 21-ம் திகதியளவில் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே என்னிடம் பாஸ்போட் தந்தவர்கள் உடனே வந்து சந்திக்சவும். மற்றையோர் பாஸ்போட்டுடன் வந்து என்னை நேரில் சந்திக்கவும்.

வியாழன், வெள்ளி, சனி.

வ. நல்லையா,
அளவெட்டி.

(C 3403)



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

[A 787]


## பண்ணிசை போட்டியில் முதலிடம்

வட்டுக்கோட்டை, வியா.

வட்டுக்கோட்டை வட்டார ரீதியில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை கீழ்ப்பிரிவு ஆண்கள் தனிப்பாடலிலும் பெண்கள் குழுப் பாடலிலும் முதலிடத்தைப் பெற்றது, ஆரம்பப் பிரிவு பெண்கள் தனிப்பாடலில் 2ம் இடத்தைப் பெற்றனர் இப்பாடசாலையில் இசை ஆசிரியர் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

### சனசமூக நிலையங்களின் பாரிய பொறுப்பு

கொழும்புத்துறை வெள்ளி

''பின்தங்கிய நிலையிலிருக்கும் கிராமங்களை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டிய பாரியபொறுப்பு சனசமூக நிலையங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே கிராமிய ரீதியாகச் சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்துச் சமாஜங்களை உருவாக்கிவருகின்றோம்.'' இவ்வாறு செம்பியன் பற்று அபிவிருத்திச் சபை உப அலுவலக எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி செ. கணேசன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''யாழ். மாவட்டத்தில் செம்பியன்பற்றுக் கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள போதிலும் சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. பல வருடகாலமாகப் பல்வேறு துறைகளிலும் புறக்கணிப்புக்குள்ளாகி வரும் இக்கிராம மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டிற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்ளவேண்டியது அவசியம்.''

உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு சி. வ. கணேசன், சமாஜத் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை. திரு சி. மாசிலாமணி ஆகியோரும் பேசினர்.

(க)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி கந்தையர்**
(Malayan Pensioner,
காரைநகர்)

தோற்றம்: 17-1 -1901
மறைவு: 12-06-1986
திதி: 11-07-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து அன்புடனும், பாசமுடனும் வளர்த்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே! ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்,

அன்புள்ள மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வலந்தலை வடக்கு,
காரைநகர். (C 3360)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**செல்லம்மா குமாரசாமி**

மண்ணுலகு:
25 - 06 - 1921

விண்ணுலகு:
22 - 06 - 1985

திதி: 11 - 07 - 1986

எங்கள் குடும்பத்தின் அணையா ஒளி விளக்கே ஆறாத்துயரில் எம்மை எல்லாம் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே. நீ எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும் உன் நினைவு எம்மை விட்டு அகலாது. உன் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டி நிற்கும்,

உங்கள் பிரிவால்
துயருறும்,

மகன், மகள்மார்,
சகோதரர்கள்,
மருமகன்மார்,
மருமக்கள்மார்,
பேரன்மார்,
பேத்திமார்,
உறவினர்கள்,

மாங்கொல்லை வீதி,
காங்கேசன்துறை,

(C 3432)


## சற்றுப் பொறுங்கள்

எசன்ஸ் வகைகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றது!

ஆம்! இது வைத்தியர்களின் அத்தாட்சி!

ஆகவே சுத்தமான, சுகாதாரமான, பழரச பானங்களைப் பருகி உங்கள் உடல் நலத்தை இவ் விளவேனிற் காலத்தில் பாதுகாத்துக்கொள்ளுங்கள், அவ்வரிசையில் அமைவதுதான் தோலகட்டி தயாரிப்புகள். தோலகட்டி நெல்லிரசம், சுத்தமான், சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. கடந்த 65 வருட காலமாக மக்கள் மனதில் நிலைத்த பெயர் - மறநது விடாதீர்கள்! தோலகட்டி நெல்லிரசம் தாராளமாக கிடைக்கின்றது.

விலை ரூபா 24/50

ஏகப் பிரதிநிதிகள்:

| | |
|---|---|
| செபமாலை தாசர்சபை,<br>தோலகட்டி,<br>வயாவிளான், | ஜோ. எகட்டன்,<br>செனத் மார்க்கட்டிங்,<br>யாழ்நகர். |

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
**வரணி மிசன் விற்பனை நிலையம்,**
**145, நவீன சந்தை, யாழ்நகர்.**

[A 780]



# கொழும்புக்கு உடனடித் தொலைபேசித் தொடர்புகள்

துரித கதியில் தொலைபேசித் தொடர்பைப் பெற்றுத் தருபவர்கள் என்ற பெருமையைப்பெற்ற ஸ்தாபனம் M. C. T.

**சர்வதேச ரெலிபோன் - ரெலெக்ஸ்**

★ எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
★ நியாயமான, சரியான கட்டணம்
★ பாதுகாப்புமிக்க இடம்
★ இரவில் தங்க அறைவசதி
★ பாதுகாப்பான வாகன தரிப்பிடம்

dyn ads

**MACK COMMUNICATIONS TRAVELS**
No. 8, 1st Lane, Point Pedro Road,
Jaffna.
TELE:- 24791, 24836.

[A 783]



## உடனடி பிரயாண ஒழுங்குகள்
## விசேஷ சேவை

**சவுதி அரேபியா**

**கிளீனேர்ஸ்:-**
வைத்தியசாலை, விமான நிலையம்,
மத்திய தொலைபேசித் திணைக்களம்.

20 நாட்களுக்குள் பிரயாணம் செய்யக்கூடிய ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேர்சல் ஏஜென்சீஸ்**
**இல. 125 (455), ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் முன்பாக - ஆயுர்வேதக் கல்லூரி அருகாமையில்)

(A 776)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்ற கைலாசபிள்ளை பெண் மகேஸ்வரி என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துகளின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

இல. ரி/281

கந்தசாமி கைலாசபிள்ளை, கோப்பாய் தெற்குதற்போது வதிவது சீமெந்து தொழிற்சாலை விடுதி காங்கேசன் துறை.

மனுதார்,

எதிர்

கைலாசபிள்ளை பிரபாகரனின், கோப்பாய் தெற்கு தற்போது 5, வில்லா டி குலமா, 75018 பாரிஸ் பிரான்ஸ்.

எதிர்மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிச் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு சாரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1986ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி. இராமச்சந்திர ஐயர்
பதிவாளருக்காக,

மு. யோககுமார்
மனுதாரின் சட்டத்தரணி.

C 3411

## 51-வது நாள் நினைவஞ்சலி



செல்வி
சிவபாதசுந்தரம்
புஸ்பராணி

தாயின் மடியில்:
1966-09-29

இறைவன் அடியில்:
1986-05-22

பாடிவந்த பறவை ஒன்று
பாதியிலே ஓய்ந்ததேனோ
கூடிவாழ்ந்த உறவு ஒன்று
கூடு விட்டுப்
போன தேனோ
தேடித்தேடி
அலைகின்றோம்
தெய்வத்திடம்
சென்றாயோ
கல்வி கற்க ஓடிவந்தாய்
கண்ணீரை ஏன் தந்தாய்
பழகிய நட்பை யெல்லாம்
பாவை நீ மறந்ததேனோ
பிரிவுத் துயரை
தாங்காமல்
பித்தர்கள்போல்
பிதற்றுகிறோம்
உண்மை அன்பு
உனக்கிருந்தால்
ஓடிவந்து ஆறுதல்தா.

மொடேன் எடியுகேசன்
சென்ரர்,
மாணவர் ஒன்றியம்,
கரவெட்டி.

(C 3381)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை கிராம சேவகர்பிரிவு மக்கள் அவையின் சுகாதாரக்குழுவின் நிர்வாகிகளாக கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: திரு. பிலிப்றேச் உபதலைவர் டாக்டர் திரு எஸ் சண்முகரத்தினம் செயலாளர்; திரு. சி. பேரானந்தம் உப செயலாளர்: திரு. சு. செல்வராசா பொருளாளர்: திரு. செ. கந்தசாமி உப பொருளாளர் திரு. சி. கந்தசாமி செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப்பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

வேலணை கிழக்கு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. சோ. வடிவேலு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர். திரு. சோ. வடிவேலு செயலாளர்; திரு ஆ கருணாகரன் தனதிகாரி திரு. பொ. சிவசுந்தரம் மற்றும் செயர்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

சங்கானை கிழக்கு விவசாயிகள் குழுவின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் அண்மையில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சங்கானை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜி. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் குழு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம்.

தலைவர்: கா. சதாசிவம் பிள்ளை உபதலைவர்கள்: க. இராமலிங்கம் வ சண்முகம் செயலாளர்: வீரசிங்கம், உப செயலாளர்: கு. முருகேசு பொருளாளர். க. செல்லப்பா செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவுசெய்யப்பட்டனர்,

0 0 0

கொய்யாத் தோட்டம் புது வீதி ஞான செல்வ விநாய

சர் தேவஸ்தான பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபை உறுப்பினர் விபரம் வருமாறு

தலைவர்: திரு. செ. கோபாலசாமி உபதலைவர்; திரு கே. தியாகராஜா செயலா திரு. கு. இராஜசிங்கம் பொருளாளர். திரு. மு. சிவசுப்பிரமணியம்.

5பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்று ரதோற்சவம்

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவில் தேர்த் திருவிழா இன்றாகும் அம்பாள் இன்று காலை 8 மணிக்கு தேவி ரத ஆரோகணம் இடம்பெறும், அம்பாளின் அருட் தோற்றத்தை இங்கு காண்கின்றோம்



## காயமடைந்த இருவர்

யாழ்ப்பாணம, வெள்ளி

மன்னார்கடலில் இம்மாதம் 1-ம் திகதி இலங்கை கடற்படையினர்சுட்டபோதுகாயமடைந்த ஆர். ஆறுமுகம் [28 வயது], ரி. கிருஷ்ணன் [27 வயது] ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ]

## இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- 28 (12-7-1986
கிழமை- சனி
திதி- பஞ்சமி பி. ப. வரை
நட்சத்திரம்- பூரம்
பி. ப. வரை

மேடம்: உறவு முறைகளில் பிளவுகளே தென்படும் மனதில் உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

இடபம், கை கொடுத்து உதவுவதற்கு தந்தை முன் வருவார். காரிய சித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்கள் ஆவார்கள்.

மிதுனம்: தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புமேற்படும்.

கடகம்; மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகையும் துள்ளும்.

சிங்கம்: தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். திடீர் பிரயாணத்திற்கும் இடம் உண்டு உடல் நலத்தைப் பேணவும்.

துலாம்: அற்ப விடயத்திற்குக்கூட ஆத்திரப்படுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். அடக்கம் வேண்டும்

விருச்சிகம்! எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைபடலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

தனுசு: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் பெருகும். பொருள் வரவிற்கும் இடமுண்டு

மகரம்: அறவழியில் மனம் செல்லும் குருவின் ஆசிக்கும் இடமுண்டு புத்திர வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

கும்பம்: பகை மூட்டம் வட்டமிடும் வீணான வார்த்தைகளால் மனம் புண்படும் தொழில் துறையிலும் முட்டுக்கட்டை தோன்றும்.

மீனம்: இல்லத்தில் இனிமை தவழும். இன சனக் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு. தொழில் துறையிலும் சிறப்புண்டு.

திருமலை ரவீந்திரன்

## மருந்துக் கலவையாளர் தெரிவு

பண்டத்தரிப்பு, வெள்ளி

யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக்கலவையாளர்களாகக் கடமையாற்றுவதற்கு 17 பேர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டனர்

அவர்களில் 13 பேர் வேலை வங்கி மூலமும் 4 பேர் சுகாதாரத்திணைக்கள மூலமும் தெரிவு செய்யப்பட்டனர் மேற்படி இருமாவட்டங்களிலும் நீண்டகாலமாக இருந்துவரும் மருந்துக் கலவையாளர்களுக்கான வெற்றிடங்கள் இதனால் விரைவில் நிரப்பப்படவிருப்பது குறித்து அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ் மாவட்டக்கிளை, யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளது.


## உடனடியாகத் தேவை

பியர் வெற்றுப்போத்தல்கள் அல்லது சோடா பாணி அடைக்கும் போத்தல்கள் உடனடியாகத் தேவை. ஆகக்கூடிய விலை கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு உடனடியாக

**பணிப்பாளர்,**

அருள் ஆச்சிரமம், 5. கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி:24081
என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

[A 782]

## Wanted Immediately Resident Medical Officer

Applications are called for resident medical officer at Misson Hospital, Murasimoddai Those with M B B S qualifications and those who are qualified western practitioners [RMP] can apply.

Salary negotiable.

For further particulars please contact:

The Acting Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay.

[A-928]

## உடன் தேவை

இனிப்புவகை தயாரிப்பவர்

யாழ் நகர் இனிப்பு தயாரிக்கும் நிறுவனத்திற்கு அனுபவமும் பொறுப்பும் உள்ள தலைமை இனிப்புவகை தயாரிப்பாளர் உடனடியாகத் தேவை.

Candy Butter Scotch இனிப்பு வகைகள் தயாரிப்பதில் அனுபவம் முக்கியம்.

கவர்ச்சிகரமான ஊதியமும் சலுகையும் வழங்கப்படும்.

19-07-86ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்:

**Roots Confectionary Ltd.**

162A, Bankshall Street, Jaffna.

[C 3404]

## Manpower Marketing Services

உற்பத்தியாளர்களே!

உங்களது உற்பத்திப்பொருட்களை சிறந்த முறையில் எம் அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதிகள் மூலம் விற்பனை செய்வதற்கு உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

முகவரி;

**Marketing Manager,**

MAN POWER MARKETING SERVICES,
533, STANLEY ROAD, JAFFNA.

(C-3289)

## வெளிநாடு செல்பவர்களுக்கு---

வெளிநாடு செல்பவர்கள் தமது உடமைகளை நியாய விலையில் விற்க ஓர் அரிய வாய்ப்பு. வாகனங்கள், இயந்திரங்கள். மின் உபகரணங்கள், வீடுகள், காணிகள், வீட்டுத் தளபாடங்கள், மற்றும் எதுவாயினும் இலகுவாக விற்றுக்கொள்ளலாம். ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம். மக்களின் நம்பிக்கையை பெற்ற எமது ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

**Mack Auctioneers & Brokers,**

No. 8, 1st Lane Point Pedro Road, Jaffna.
Tele:- 24791, 24836.

[A 789]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 12-7-86

## ஹர்த்தால் 16-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

வடபிராந்திய லொறிப் போக்குவரத்து சங்கத்தினல் நாளைமறுதினம் 14-ம் திகதி நடாத்த விருந்த ஊர்வலமும் ஹர்த்தாலும் அடுத்த மறுதினம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. [மா]

## கருவாடு அள்ளியவருக்கு நேர்ந்த கதி!

வல்வெட்டித்துறை, வெள்.

வல்வை இராணுவ முகாமிலிருந்து சுடப்பட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டின் போது வல்வை வாடி கடற்கரையோரத்தில் கருவாடடை அள்ளிக் கொண்டிருந்த மீனவ இளைஞர் சின்னவி திருச்செல்வ (வயது 22) என்பவரது தொடையை துப்பாக்கிரவை துளைத்துச் சென்றது.

ரத்தம் பெருகி ஓடிய நிலையில் இவர் உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து சத்திர சிகிச்சை அளிக்கப்படவேண்டிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

### ● பருத்தித்துறையில்

# ரோந்துவந்த படையினர்மீது புலிகள் தாக்குதல்

புலோலி சனி

''பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நடைபவனியாக வந்து கொண்டிருந்த பொழுது தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் எதிர்கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவதரப்பில்பலர் கொல்லப்பட்டனர்: சிலர் படுகாயமுற்றனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் (தோமஸ்) ரதீஸ்வரன் அரியாலை] போராளி வீரமரணமடைந்தார்'' இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல்ப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல்12மணியளவில் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நடராஜர் கலையரங்கப்பக்கமாக இராணுவத்தினர் வந்த பொழுதே இந்த நேரடி மோதல் இடம் பெற்றது.

பின்னர் இராணுவத்தினர் முகாம் நோக்கித் திரும்பினர் தமது தரப்பில் பலியான போராளிக்கு வீரவணக்கம் செலுத்துவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவுக்கப்பட்டுள்ளது. [மா]

இனப்பிரச்னை

## அரசு வெளியிட்டுள்ள திட்டங்களும் விபரங்களும்

கொழும்பு, வெள்ளி

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கையரசினுல் இந்தியரசிடம் கையளிக்கப்பட்ட திட்டங்களின் விபரங்கள் அரசியல் கட்சிகளின் மாநாட்டுச் செயலகத்தால் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கல் சம்பந்தமான சகல கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டுதேவையானசிலமாற்றங்களும் செய்யப்படுமென ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனஏற்சனவே வழங்கியஉறுதிமொழியைத் தொடர்ந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் திட்டங்கள் யாவும் இலங்கை அரசியலமைப்பின் ஒற்றையாட்சித் தன்மையைத் தொடர்ந்து பேணவேண்டுமெனவும் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், தன்னுதிக்கத்திற்கும், இறைமைக்கும் உட்பட்டதாகவே ஆராயப்படவேண்டுமெனவும் முன்நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் இலங்கை அரசியலமைப்பின் திட்டங்களில் அடங்கியுள்ள திருத்தங்களினது வத்ம்பிற்குட்பட்டதாகவே மேற்கொள்ளப்படவிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தளவில் பின்வரும் அம்சங்களில் மாற்றுத் திட்டங்களை ருத்திற்கொள்ள இலங்கையரசு தயாராகவுள்ளதாக அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையின் விபரம் பின்வருமாறு-:

★ தமக்கிடையேயுள்ள பொதுவான அக்கறையும் ஆர்வமும் உள்ள விடயங்களில் ஒருங்கிணைப்பையும் கலந்தாலோசனையும் நடாத்துவதற்காக நிறுவன அமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள விஷேச வசதியளித்தல்,

★ மாகாண அரசாங்கத்தின் கீழ் உள்ள சகல இனமக்களும் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தும் தக்க தாபன ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்

★ மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் சகல இனங்களுக்கும் பெருமளவு உள்நாட்டு சுயாட்சிலய வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியனவே மேற்குறிப்பிட்ட அம்சங்களாகும்.

இறுதியாக இணக்கம் காண்பதற்கு முன்னர் மேலும் பேச்சுவார்த்தை நடத்தலாமென்ற இலங்கையரசின் நம்பிக்கை மீண்டும் வலியுறுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சிவ)

## காரைநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடைபெற்றது ஈழவர் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வூர்வலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்

இவ்வூர்வலம் வியாவிலில் ஆரம்பமாகி வலந்தலையல் அமைந்துள்ள உதவியரசாங்க அதிபர் பணிமனையில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து ஓர் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. [சிவ]

## அராலிபொது அமைப்புகள் அன்பளிப்பு

அராலி, வெள்ளி

படுகொலை செய்யப்பட்ட குருநகர் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அராலி பொது அமைப்புக்கள் ரூ 5 ஆயிரம் பெறுமதியான 10 மூடை அரிசியையும். 15 கிலோ மைசூர் பருப்பையும் பொருள் உதவியாக வழங்கியுள்ளனர்.

அராலி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம், பிரஜைகள் குழு, கலைமகள் சனசமூக நிலையம், கலைமகள் கிராம முன்னேற்றச் சங்கம், அண்ணு விளையாட்டுக் கழகம், மலையாளங்காடு ஐயனர் தர்மகர்த்தா சபை ஆகியனவே கூட்டாக இந்தப் பொருள் உதவியைச் செய்துள்ளன.

இந்த பொது அமைப்புக்களுக்கு குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம், சனி

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன எழுதிய 'என்றுவது ஒருநாள்? என்ற குறுநாவலின் அறிமுகவிழா இன்று பிற்பகல் 2-30-க்கு இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது

கலாநிதி இ. பாலசுந்தரம் கலாநிதி நா. சுப்பிரமணியன், வி. பி. சிவநாதன், சோ. தேவராஜா, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.சி வி கே. சிவஞானம் ஆகியோர் உரையாறறவுள்ளனர்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் மாத்தளைக் கந்தசாமி கோவில்தேர் உற்சவம் இன்று நடைபெறுகின்றது. நாளை தீர்த்தமும் இடம் பெறும்.

0 0 0

யாழ், வண்ணை கன்ஞதிட்டி அருள்மிகு காளியம்பாள் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது பத்து தினங்கள உற்சவம் நிகழும்.

## மரண அறிவித்தல்

### தருமலிங்கம் ரதீஸ்வரன்

அன்னையின் மடியில்: 9- 8- 59.

அரக்கர்களின் பிடியில்: 11- 7- 86.

ரதீஸ்வரன் நேற்று, பருத்தித்துறையில் அகால மரணமானுர். கப்பலில் பணியாற்றி, பின்பு நோர்வே சென்றுவந்த இவர், புகையிரதப் பகுதியில் கடமையாற்றிய பொன்னுத்துரை தருமலிங்கத்தினதும் லீலாவதியினதும் அன்புமகனும், அகால மரணமான மகேஸ்வரன், கோணேஸ்வரன் [நோர்வே], நகுலேஸ்வரன் [நோர்வே], சாந்திமதி ஆகியோரது அருமைச் சகோதரனுமாவார். அன்னுரதுபூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சேரி நல்லூர்வீதியிலுள்ள அன்னுரது இலலத்திலிருந்து இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு துண்டிமாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C 3445] தகவல்: பொ. தருமலிங்கம்.

### யோசவ் மரியநாயகம்

சில்லாலையைச் சேர்ந்த திரு. யோசவ் மரியநாயகம் வெள்ளிக்கிழமை 11 - 07 - 86 காலை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற மேரிபீலிக்ஸ் நற்குணத்தின் அன்புக்கணவரும், மேரி மாகிறேற் அஞ்சலா, அருட்திரு லூயிஸ் மொன்போட், மரிய கொறற்றிசுசீலா, மரிய அன்ரனி அல்பேட், மரிய கிறிஸ்ரிரூபேட் அருமைநாயகம் ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகன் அமலநாதன் ஆன்மரிய சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

இறுதிப்பயண வழிபாடுகள் ஞாயிறுதினம் 13-7-86 மாலை 3 மணிக்கு சில்லாலை கதிரைமாத ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். (A-929)

### சரஸ்வதி சுப்பிரமணியம்

திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம். 10-7-86ல் காலமானுர். இவர் காலம்சென்ற [காலி லீலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்] அ. சி. சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி கணேசன். திருமதி விமலாம்பிகை பாஸ்கரன், திருமதி சரோஜினிதேவி ஆனந்தலிங்கம், திருமதி நித்தியமலர் சோதிநாதன், திரு. சுந்தரலிங்கம் [இலங்கை மின்சாரசபை ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.] திருமதி சகுந்தலாதேவி பரதராஜா [லண்டன்], செல்வன் யோகலிங்கம் [அமெரிக்கா], செல்வி. கருணுதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும். கணேசன் [புகையிரத திணைக்களம் மருதானை], பாஸ்கரன் [இலங்கை மின்சார சபை கொழும்பு], ஆனந்தலிங்கம் [மக்கள் வங்கி சுன்ஞகம்], சோதிநாதன் [ஓமான்], திருமதி. வசந்தமலர் சுந்தரலிங்கம் [இராமகிருஷ்ண மகளிர் பாடசாலை], பரதராஜா [லண்டன்], ஆகியோரின் அன்பு மாமியாரும். கீதா [யாழ். இந்து மகளிர் கல்லூரி], சாந்தி [நுண்கலைப் பீடம் யாழ். பல்கலைக் கழகம்] முரளி [யாழ். இந்துக் கல்லூரி], கிருஷிகா, திருஷா [யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்], துஷ்யன், தனுஷன் [லண்டன்] ஆகியோரின் பாட்டியும், திருமதி. மகேஸ்வரி அரசரட்ணம், செல்வரத்தினம் காலம் சென்ற வீரசிங்கம், துரைராஜா சேனுதிராஜா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-7-86 [இன்று] சனிக்கிழமை மாலை 3 மணிக்கு லீலா வாசம் கோண்டாவில் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். [C-3438]

### திரு. வை. கந்தசாமி

சாவகச்சேரி நுணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அல்வாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய அதிபர் திரு. வை கந்தசாமி அவர்கள் 10-07-1986 அன்று காலமாகி விட்டார். அன்னுர் திருமதி செல்லம்மாவின் (ஆசிரியை வட இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், டாக்டர் கணேசலிங்கம் (அம்பாறை அரசினர் வைத்தியசாலை), பவானி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-07-1986 (இன்று) சனிக்கிழமை அல்வாயில் அவரில்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலைத் தயவு செய்து உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வே.குகதாஸன் (பெருமகன்)

(C 3427)

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி சிதம்பரநாச்சியார்

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த பெரியதம்பி சிதம்பரநாச்சியார் காலமானுர். இவர் பெரியதம்பியின் அன்பு மனைவியும், விசுவநாதன் (லிபியா], காலஞ்சென்ற தெய்வநாயகி ஜெயமணி முத்துலட்சுமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும், வேதவனம், காலஞ்சென்ற மகாலிங்கம், பொன். தெய்வேந்திரன், அழகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று (12-7-86) சனிக்கிழமை மாலை 2 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ் மானிப்பாய். A 930

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.